**நாகொட பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 20 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, நாகொட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூ. 2,462,802 தொகையான பங்களிப்பு தொகை தொடர்பாக நிதிக்கூற்றுகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 122,192,256 தொகைக்கான 04 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய பதிவேடுகளில் காணப்பட்டுள்ள மீதிகளுக்கிடையே சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 41,379,542 ஆகும்.

#### 1.3.3 தொங்கல் கணக்கு

2008 ஆண்டு முதல் கொண்டுவந்து காணப்படும் ரூபா 18,315 தொகைக்கான தொங்கல் கணக்கின் செலவு மீதியை இணக்கங் கண்டு தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ம் திகதியில் உள்ளவாறு நிலுவை, பெறுமதி கூட்டிய வரி மற்றும் முத்திரை வரி கூட்டுத்தொகை ரூபா 3,029,368 தொகை 2013 ம் ஆண்டிற்கு முன்னால் இருந்து காணப்படுவதுடன், அந்த மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட 17 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய, கடந்த ஆண்டு முன்னர் இருந்து காணப்படும் கூட்டுப் பெறுமதி ரூபா 862,718 தொகையினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்வின் போது சமர்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையினால் ரூபா 51,060,617 இற்கான 08 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
| --- | --- | --- |
| | ரூபா. | |
| **(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்** | | |
| பிரிவு 172(2) | 995,887 | 1988 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தைத் தீர்த்திருக்கவில்லை. |
| **(ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி** | | |
| விதி 218 | - | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆண்டிற்கு ஒருமுறையேனும் பரிசோதனை செய்திருக்க வில்லை. |

**(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்**

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 356(ஈ) | 73,405 | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக் காக சமர்ப்பிக்கப்படாத 6 மாத காலத்தை மிகைத்துள்ள 36 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,029,616 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,944,750 தொகை ஆகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கிழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 65,000 | 65,553 | 6,622 | 58,931 | 65,000 | 62,720 | 18,700 | 44,020 |
| (ii) வாடகை | 3,512,720 | 3,497,720 | 2,907,606 | 590,114 | 3,839,420 | 3,501,720 | 2,199,775 | 1,301,945 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 600,000 | 778,918 | 778,918 | - | 600,000 | 818,566 | 818,566 | - |
| | 4,177,720 | 4,342,191 | 3,693,146 | 649,045 | 4,504,420 | 4,383,006 | 3,037,041 | 1,345,965 |

**2.2.2 வீதவரியும் வரியும்**

மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 109,573 தொகைக்கான ஏக்கர் வரித் தொகையில் ஆண்டின் போது 07 சதவீதமளவு குறைந்த பெறுமதி ஒன்று அறவிடப்பட்டிருந்தது. நிலுவை வரி அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ம்

இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 58,931 தொகை வரை அதிகரித்திருந்தது.

### 2.2.3 வாடகை

#### (அ) கடை வாடகை

மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டி காணப்பட்ட ரூபா 4,799,665 தொகைக்கான கடை வாடகையில் 61 சதவீதமே அறவிடப்பட்டிருந்தது. 1987 இன் 15 பிரதேச சபை சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்காமையால் வருட இறுதியில் உள்ளவாறு மேலும் அறவிடப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 590,114 ஆகும்.

#### (ஆ) குத்தகை

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 02 சந்தைகளை குத்தகை கொடுப்பது தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 313,227 தொகை மீளாய்வாண்டு இறுதி அளவில் நிலுவையில் காணப்பட்டதுடன், 1987 இன் 15 ம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159 ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம்

மாகாண சபையின் பிரதான செயளாலரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 4,504,684 மற்றும் நீதி மன்றத் தண்டப்பணமாக ரூபா 3,776,354 தொகை கிடைக்க வேண்டியிருந்ததுடன் நீதிமன்றத் தண்டப்பணம் தொடர்பாக மீளாய்வாண்டின் போது எதுவித பணமும் கிடைத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேசசபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்றன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

விதிக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த 08 செயல்பணிகளுக்காக மாத்திரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரித்திருக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்

மீளாய்வாண்டின், போதுநெறிமுறை அடிப்படை மானியங்கள்/ மாகாண சபை மந்திரமார் ஏற்பாடுகளின் கீழ் சபைக்கு கிடைத்திருந்த 12 அபிவிருத்தி செயற்திட்டங்களில் 03 செயற்திட்டங்கள் இரத்து செய்யப்பட்டிருந்ததுடன், 05 செயற்திட்டங்கள் 2018 ஏப்ரல் 09

ஆம் திகதி அளவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் கிராமிய பிரதேசங்கள் 1,000 கி.மீற்றர் பாதை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்திட்டமொன்று 2018 ஏப்ரல் 09 திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம்**

சபையின் அதிகார பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை உடுகம எப்த்திரொப்வத்த என்ற காணியில் போடப்படுவதுடன், உக்கும் குப்பைகளில் இருந்து சேதன பசளை உற்பத்தி செய்யப்படுகின்றது. உக்காத குப்பைகளில் விற்பனை செய்யக்கூடிய பொருட்களை விற்பனை செய்து மீதியானவற்றை செயற்களத்தில் கிடங்கு ஒன்றில் போடப்பட்டு மண் போடுதல் நடைபெற்றுவந்தது. குப்பை போடப்படும் காணியின் உரிமை பிரதேச செயளாருக்கு உரித்தாக இருந்த போதிலும் அதன் உரிமையை தனதாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் PL/1/5/12 ஆம் இலக்க குப்பை முகாமைத்துவ அலுவல்கள் முறைப்படுத்துவதன் கீழ் வெளியிட்ட சுற்றறிக்கை வழிகாட்டலின் பிரகாரம் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக தனியான அலகு ஒன்று நிறுவப்பட்டு, நீண்ட கால திட்டமென்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், சபையில் அவ்வாறான திட்டமொன்று காணப்படவில்லை. இதற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்காகிய உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகால திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**(உ) எதிர்ப்பார்க்கப்பட்ட நலன்கள பெற்றுக்கொள்ளாமை**

சபையின் தலைமை அலுவலத்தை விரிவாக்குவதற்காக 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது ரூபா 591,246 தொகை செலவிடப்பட்டு, தலைமை அலுவலகத்திற்கு பகுதி ஒன்று சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அந்த அலுவல்கள் பூர்த்தி செய்யப்படாமையினால் குறிப்பிட்ட கட்டிடம் பயன்படுத்த முடியாமல் காணப்பட்டது.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி அடைந்துள்ள பிரதேசங்களை இனங்கண்டு அப்பிரதேசங்களில் இருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) மற்றும் (2) உப பிரிவுகளின் பிரகாரம் முன்னேறிய பகுதிகளை பகிரங்கப்படுத்தி வீதவரி அறவீடு செய்தல் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்ட பிரமானங்களுக்கு இணங்க 2008 ஜனவரி 25 ஆம் திகதி 1553/16 ஆம் இலக்க வர்த்தமானியின் முதலாவது அட்டவணையின் “ஈ” பகுதியில் குறிப்பிட்டுள்ள

செயற்பாடுகள் தொடர்பாக பிரதேச சபை ஒன்றினால் சுற்றாடர் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படவேண்டுமெனினும், சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்பட்ட அவ்வாறான 14 கைத்தொழில்கள் தொடர்பாக சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று பெற்றிருக்காதுடன், அதற்காக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபைக்கு சொந்தமான 07 காடைகள் 16 வருடங்களை விட மிகையான காலம் முதல் வாடகைக்கு கொடுத்திருந்த போதிலும், 2010 திசெம்பர் 27 திகதி உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2003,2007 மற்றும் 2013 ஆண்டுகளின் போது 10 பற்றுச் சீட்டுப் புத்தகங்கள், 26 அடியிதழ் புத்தகங்கள், 14 சிட்டைப் புத்தகங்கள், 12 நூலக தண்டப்பண பற்றுச் சீட்டு புத்தகங்கள் மற்றும் 47 முன்பள்ளி கட்டணம் அறவீடு செய்யும் புத்தகங்கள் என்பன காணாமல் போயிருந்தன. இது தொடர்பாக சட்டநடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகைகள்**

சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ள பதவியணியினை மிகைத்து சேவையில் ஈடுபடுத்தியிருந்த 11 பதவிகளின் மிகைப் பதவியணியை முறைப்படுத்துவதற்கும் 10 பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களை ஆவணப்படுத்தாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 132,788 தொகை பெறுமதியான 04 டிரக்டர் டயர்கள் மற்றும் 02 டிரக்டர் டெய்லர் டயர்களை ஆவணப்படுத்தாமல் பயன்படுத்தாமல் கலஞ்சியத்தில் காணப்பட்டது.

(ஆ) கலஞ்சியத்தில் காணப்பட்ட துவிச்சக்கர வண்டி ஒன்றின் பெறுமதியின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டுக்கு எடுத்திருக்காதுடன் வருடாந்த பண்டக் கணிப்பீட்டின் போது இனங்கண்டு ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4.2 விளைவற்ற / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

சபையினது பாவனையில் இருந்து அகற்றப்பட்ட பெக்கோ இயந்திரம் 2011 ஆண்டு முதல் செய்யப்படாமல் காணப்பட்டதுடன் ஜே.ஸீ.பீ இயந்திரமொன்றும் டெயிலர் ஒன்று மற்றும் டெய்லர் நீர் பவுஸர் ஒன்று பயன்படுத்தப்படாமல் சபைக்கு சொந்தமான வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையே கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்ட மையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 03 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்காகிய வருமானங்களில் கூட்டுத்தொகை ரூபா 10,362,697 தொகையாக காணப்பட்டதுடன் அப்பெறுமதி 10 சதவீதம் 26 இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 05 வருமான விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 885,195 இற்காக பாதீட்டை மிகைத்திருந்த வருமானம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன், அப்பெறுமதி 02 சதவீதம் முதல் 85 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(இ) 09 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 10,272,188 தொகைக்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அப்பெறுமதி 04 சதவீதம் முதல் 43 சதவீத வீச்சில் காணப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

சபையில் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமித்திருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்தில் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | முன்கொண்டுவரப்பட்ட கணக்கு மீதிகள் தீர்திருக் காமை |
| | | (ii) | தொங்கல் கணக்கு மீதிகளை தீர்திருக்காமை |
| (ஆ) | வாகனக் கட்டுப்பாடு | | விளைவற்ற வாகனங்களை அகற்றாமை. |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | மதிப்பீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் தொடர்பாக கவனம் செலுத்தி, பாதீட்டை திருத்தியிருக்கவில்லை. |
| (ஈ) | பதிவேடுகள் பேணல் | (i) | பதிவேடுகள் பேணப்படாமை. |
| | | (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரை ஆக்கப்பட்டிருக்காமை. |
| (உ) | பதவியணி முகாமைத்துவம் | | பதவியணியினை முறைப்படுத்துவதற்காக நடவடி க்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஊ) | வருமானம் சேகரித்தல் | (i) | வீத வரி வளங்களை அறிவித்து, வரி அறவீடு செய்யப்படாமை |
| | | (ii) | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு முறையான வேலைத்திட்டமென்று செயற்படுத்தி யிருக்கவில்லை. |